ஓம்

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

 

ஸ்ரீ கோவிலூர் மடாலயம்

முத்தி ராம லிங்க ஞாந தேசிக ராதீநத்து

ஸ்ரீ அண்ணாமலை ஞாந தேசிக சுவாமிகள்

அவர்களால்

ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும்

# பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபையின்

# பஞ்சம சகாப்த ப்ரதீபநம்.

---

இது

ஷை சபையின் காரியதரிசி

கண்டனூர்

நா. பெ. நா. முத்து ராமய்யா அவர்களால்

சென்னை - கோமளேசுவரன்பேட்டை

சச்சிதாநந்தம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

1919.

ஓம்:

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீ கோவிலூர் மடாலயம்

முத்தி ராம லிங்க ஞாந தேசிகர் ஆதீநத்தில்

ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும்

# பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபையின்

# தாத்பர்யம்.

மூன்றுமின் ஞான்றோ விருமையிற் பூன்ற முதல்வனே யனுபவப் படுவன்
தோன்றுறு சமாதி துயிலுறு மூர்ச்சை தோன்றுறு முனனமு நிறைவே
மூன்றுறு வேறுங் கிஞ்சிலிற் சுகமின் முகிணிறை வெஃததி சுகமாம்
ஈன்றுறு துயர்கூர் நாரதற் கிவண மியம்பினன் சநற்குமா ரனரோ.

வேதமைந் தரிய புராணம தோடு விவிதநூற் றெளிந்துந்தற் றெளியாத்
தீதினு லதிக வாதைநா ரதனுஞ் செறிந்தனன் வேதமோ திடுமுன்
ஓதுமுத் தாப மாத்திரை யானே யுறுமஞர் பின்னரப் யாசம்
ஓதிய மறத்த லிகழ்வொடு கருவ முறுதலான் மிகு துய ராமே.

அவ்வியா னறிஞ! வலமரு கின்றே னஞர்க்கரை யென்னையீண் டடைவி
செவ்விதி னெனக்கேட் டிடமுநி சுகமே செறியிதன் கரையெனத் தெரித்
கவ்வவை ஷயிக சுகமிடர் கோடி கலத்தலிற் றுன்பமே யென்று [தான்
இவ்வுறை மதித்துக் கிஞ்சிலிற் சுகமின் றென்றுவாய் மலர்ந்தரு ளினனே.

அறிவின் மிக்க அன்பர்காள் ! உற்று நோக்குங்கள் !

இச் சம்சார தாபத்தினின்றும் நீங்குவதற் குபாயம் பிரஹ்ம வித்தை யொன்றே யாம். அறுபத்து நான்கு கலைக் ஞானங்களையு முடைய நாரத பகவான் துக்கம் நீங்காதவராய் ஸநத் குமார முநிவரை யடைந்து, பிரஹ்ம வித்தையைச் சிரவணித்துத் துக்கத்தை நீக்கின ரெனச் சுருதிகளாற் கேட்டே மாகலின், வித்தை யாவற்றுள்ளும் பிரஹ்ம வித்தையே உத்கிருஷ்ட மென நிச்சய மாகின்றது. அங்ஙனமே வேத சாஸ்திர பிரஸ்தானத் திரயாதிகளின் சம்மதமுமாம். இப் பிரஹ்ம வித்தையைக் கலிப் பிரபாவத்தால் உலகத்திலுள்ளவர்க ளறியாதவர்களாயும், பெரும்பான்மையும் அதற்குச் சாதநமான சாஸ்திராப்பியாச மில்லாதவர்களாயும் ஜீவனோ பாயங்களிலே காலத்தைக் கழித்து இச் சன்மத்தைப், பிறவா நாளாக்கு கின்றனர். அவர்கள் உஜ்ஜீவித்தற் பொருட்டுப் பிரஹ்ம வித்தியாப் பிரசாரண மென்று ஒரு சபை ஸ்தாபிக்க வேண்டு மெனத் தற் காலம் ஷே

ரூரில் மடாதிபதியா யெழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிக சுவாமிக ளவர்கள் கருத்திற் றோன்றி, கண்டனூர் நா. பெ. நா. முத்து ராமய்யா அவர்கள் நன் முயற்சியால், கோவிலூர் மடாலயத்தை ஸ்தாபித்த ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிக சுவாமிக ளவர்களின் பிரபாவம் விளங்குவதற்குப் பிரமாதீச ௵ பங்குனி ௴ ௸ குரு பூஜை தினமாகிய உத்திர நக்ஷத்திரத் தன்று இம் மகா சபை மிக்க விமரிசையாக ஸ்தாபிக்கப் பெற்று யாவர்க்கும் பயன்படுமாறு பிரஹ்ம வித்தியாப் பிரசங்காமிர்த மாரி பொழிந்து இனிது நிலவுகின்றது. இச் சபையின் ஐந்தாம் வருட பூர்த்தி உத்சவம் காளயுக்தி ௵ ஆடி ௴ 18௳ முதல் ஆடி ௴ 26௳ வரையில் காலை மாலையாகிய இருவேளைகளிலும், அறிவின் மிக்க அநேக சாதுக்களாலும், சாஸ்திரிகளாலும் பற்பல அரிய பெரிய பிரஹ்ம வித்தியா சம்பந்தமான விஷயங்கள் மந்தர்கட்கும் புத்தியிற் புலப்படுமாறு உபந்யசிக்கப் பெற்றன. பக்த கோடிக ளனைவரும் வந்திருந்து சிரவணித்துப் பெரும்பேறான பிரஹ்மாநந்தம் அடைந்தார்கள். உபந்யாசகர்களுக்குத் தகுந்த பீதாம்பரம் திரவிய முதலிய சன்மானங்களும், மற்றையோர்கட்கு அவரவர்கட்குத் தகுந்த வுபசாரணைகளும் நடத்தப் பெற்றன.

இச் சபையின் ஆதரவினால் ஸ்ரீ ஹர்ஷமிசிரர் சம்ஸ்கிருதத்தி லியற்றிய கண்டந கண்ட காத்தியம் என்னும் நூல், நியாய சந்திரரும், வேதாந்த பாஸ்கருமா யிலங்கும் கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சுப்பைய ஸ்வாமிக ளவர்களைக் கொண்டு மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது. ஸ்ரீ நாசிஹ்ம ஸ்வாமிக ளவர்க ளியற்றிய பேத திக்காரம் என்னும் நூல் சத்கிரியை யென்னும் உரையோடு உபய பாஷா வேதாந்தப் பிராவர்த்தகாசாரியரும், பரசமய கோளரியாரும் ஆகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிக ளவர்களைக் கொண்டு மொழி பெயர்க்கம்பட்டு வருகின்றது. இன்னும் பதினெண் புராணங்களை மூலத்திலுள்ளபடி வசநமாக மொழி பெயர்த்து வெளியிடுவதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்யப்பட்டு வருகின்றது. விரைவில் புராணங்கள் வெளிவரும்.

## உபந்யாச நிகழ்ந்த விவரம்.

1. ஸ்ரீ சுப்பைய ஸ்வாமிக ளவர்கள்-சபையின் நோக்கம்-பஞ்சாக்ஷரம்.
2. ஸ்ரீ சிவ ராம லிங்க ஸ்வாமிக ளவர்கள்-குரு லிங்க சங்கம பக்தி.
3. ௸ ஞானாஞ் ஞான லக்ஷணம்.
4. ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிக ளவர்கள்-மநுஷ்ய சரீரத்தின் அருமையும், பயனும்.
5. ஸ்ரீ சுப்பைய ஸ்வாமிக ளவர்கள்-வைதீக சைவத்தின் உயர்வு.
6. நீடாமங்கலம் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிக ளவர்கள்-அத்தியாரோப அபவாத லக்ஷணம்.
7. கண்டனூர் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிக ளவர்கள்-சூரபத்மன் பெற்ற உபதேச வுண்மை.

8. திருநெல்வேலி ஸ்ரீ சிவாநந்த ஸ்வாமிக ளவர்கள்-சங்கராசாரியர் பிரபாவம்.
9. சங்கர நாராயணர் கோவில் ஸ்ரீ திருமலை சாஸ்திரிக ளவர்கள்-தெய்வ நிர்ணயம். [சன சமாதி லக்ஷணம்.
10. சாக்கை-ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிக ளவர்கள்-சிரவண மநந நிதித்தியா
11. கோவிலூர் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிக ளவர்கள் - பந்த மோக்ஷ லக்ஷணம்.
12. குன்றக்குடி ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிக ளவர்கள்-உபநிஷத்களின் தாத்பரியம் பரமாத்வைதமே.
13. சங்கர நாராயணர் கோவில் ஸ்ரீ திருமலை சாஸ்திரிக ளவர்கள்-வேதாந்தத்தின் உயர்வு. [ரம்.
14. சிருங்ககிரிமடம் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிக ளவர்கள்-பஞ்சகோச விசா
15. மதுரை ஸ்ரீ கல்யாண சுந்தரப் பட்டர்-ஈஸ்வர பக்தி. [துவங்கள்.
16. காரைக்குடி ஸ்ரீ கோவிந்தராஜ ஐயங்கா ரவர்கள்-கம்பராமாயண தத்
17. குன்றக்குடி ஸ்ரீ சதாசிவ குருக்க ளவர்கள்-பகவத்கீதை சாரம்
18. கோவிலூர் மடாலயம் ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிக ளவர்கள் - சங்கரப் பிரபாவம்.

## திருநெல்வேலி

## பிரஹ்மஸ்ரீ சிவாநந்த சுவாமிக ளவர்கள் கூறி யருளியன.

---

1. உலகெலாம் புகழ்ந்திடவை ராக்கியவொண் பணிபூண்டிங் குதார ராகிப்
பலகலையுங் கற்றுவல பண்டிதராய்ப் பராநந்த பரவை யாழ்வார்
நலபணிசெய் தடிபரவ ஞாலமெலா மகிழ்வோங்க நாளு நல்கும்
நிலவுகரு ணைத்தாயாந் திருநெல்லை நாயகியை நினைந்து வாழ்வாம்.

2. பற்றெலா மறத்துறந்து சாந்தரா யுப நிடதம் பகருஞான
முற்றகில வுயிர்களுமின் புறப்பிரம வுணர்வழகா வுரைக்கும் மேலோர்
பொற்றளியா தியவியற்றப் பொருவிலாச் சமிவநத்தே புரிந்து வாழுங்
கொற்றவா ஸீசரினற் குளிர்மலர்ப்பா தங்கள்குஞ்சி கொண்டு வாழ்வாம்.

3. சிருங்கை வாழ்குரு வேந்தின்சீ ரடிக்கன்பு செழித்தோர்
ஒருங்கு தம்மிடைக் கண்டவர் சகமெலா முயர்ந்தோர்
பெருங்க்ரு பாகரர் பேணிடு சமிவநம் பிறங்கும்
அரும்பெ றற்றிரு வத்திமா முகனையஞ் சலிப்பாம்.

4. அத்தி பாதியா நந்தமே யனைத்துமென் றறிந்த
முத்தி ராமலிங் காதியாய் முறைமுறை வந்த

சத்தி யாதிய தனகிறை பெருந்தகை *தானும்
பத்தி செய்குவோ ரனைவரும் பல்லுகம் வாழ்க.

இபமன் மாமுகத் தெந்தையைக் கொற்றவா ளிறையைச்
சுபம தேதருந் திருநெல்லை நாயகிச் சுடரைத்
தபவஞ் ஞானமெய் யாநந்த முளத்திடைச் சார
உபநி டத்துரை வழியினு லொழிவிலா துறுவாம்.

கோவிலூர்ப்

பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபையின்,

ஆலங்குடி - அ. கோபாலய்யர்

## வாழ்த்துக்கவி.

---

கலி வெண்பா.

நித்தியமா யெங்கு நிறைந்த பரம்பொருளின்
றத்துவத்தை யோருந் தகையின்றி—நித்துமநம்
பொய்ப்பொருளே வேண்டிப் புலன்வழியிற் சென்றவையே
மெய்ப்பொருளென் றெண்ணி விவகரித்துத்—துய்த்துழல
விட்டியலு மானிடர்கள் வேதாந்தத் துட்பொருளை
யெட்டி யறியவிது வேதுவெனச்—சுட்டி யெழிற்
கோவிலூர் வாழவரு கொற்றவா ளீசனருண்
மேவுமுத்து ராமலிங்க மேலவன்றன்—றுவில்புகழ்
ஆதீனத் தண்ணு மலைஞாந தேசிகனுந்
தாதார்தார்ச் சுப்பைய சாமியெனுந்—தீதேதுஞ்
சேராத் திருமனத்துச் செல்வனு நூல்களெலா
மோராத் திகழு மொருவனெனப்—பேராருங்
காசிகா நந்தக் கருதுபுகழ்ச் சாமியுந்
தேசுவளர் கண்டனூர்ச் சீமானும்—பாசமகல்
முத்திரா மப்பேர்கொள் மூதறி வாளனு
மித்திறத் தேனை யவருஞ்சேர்ந்—தெத்திசையுஞ்
சார்பிரம வித்யாப்ர சாரணப்பேர் சாரவரு
மோர்சபைதா பித்திவ் வுலகிலுள—சீர்சால்
வடமொழியுந் தென்மொழியு மாண்புபெறக் கற்று
மடமொழிநற் பண்டிதர்கள் வாழ—வுடனழைத்துச்

---

* ஸ்ரீ அண்ணுமலை ஞாந தேசிகர்.

கோதில்பிர சங்கங் குலவப் புரிவித்திப்
போது வளர்க்கின்ளுர் புகல்சபையும்—மீது வளர்ந்
தையாண்டி னெல்லே யடைகின்ற காதலின்மேல்
நெய்யாண்ட கூந்தலா ணெல்லேயுமை—மெய்யருள்கொண்
டென்றும் வளர்ந்திங் கிசைசிறுவு மித்திறத்தை
யென்றென்றும் வாழ்த்துவேம் யாம்.

---

வல்ல நாடு - சங்கர சுப்பா சாஸ்திரிகள்

வெண்பா.

பூவினுயர் நிட்காம புண்ணியத்தாற் சித்தசுத்தி
மேவியமெய்த் தொண்டர் வினேயொழிந்து-சீவிக்க
ஆசிலுப தேசஞ்செ யண்ணு மலேஞாந
தேசிகவென் ளுளுஞ் செயம்.

வேறு.

வேதகலே லோககுரு விப்பிரரை நாளுமிக வேகிந்திக்கும்
பாதகதாந் த்ரிகசைவர் நினேந்ததுகை கூடாமற் பயந்தேயோட
பேதகமில் பிரமவித் யாப்பிரசா ரணசபை ஸ்தாபித்தானுன்ம
போதகனண் ணுமலேதே சிகனெனுஞ்சற் குணநிதியாம் புனிதன்ருனே.
துன்னுமலர்ப் பொழிறிகழுங் கோவிலூர் மேவிமகிழ் தோயமிந்து
பின்னியசெஞ் சடைக்கொற்ற வாளீசு வரன்கிருபைப் பிரவாகத்தான்
முன்னுமநத் தொண்டருயர் முத்திபெற வுபதேச முறையாற் செய்து
மன்னுமெழி லுயரண்ணு மலேஞாந தேசிகமால் வாழ்கமாதோ.

---

வேம்பத்தூர் சௌந்தர பாரதி.

ஞாநந் தழைக்குமிட நற்றவர்கள் சூழுமிடம்
ஆநந்த நாளு மடையுமிடம்—வானிம்பர்
பேணுபிர்ம வித்யாப் பிரசா ரணசபையாம்
ஏணுறு மிந்த விடம்.

திருங்யம் - அ நரசிம்ம பாரதியா ரவர்களால்
இயற்றப்பட்ட பாக்கள்.

---

மணிமூலா தாரத்தின் வாலேயொடும் வீற்றிருக்கும் வன்னி மூன் ஞென், துணிகோடொன் றுடைச்சுமுக துலங்கிலம்போ தரவென்னத் துதித்தேத் தன்பர், எணிமேவு மெய்பொருளு மங்கைநெல்லிக் கனி

போலே யீந்து நாளும், பணியாவு மமைகோயி லூர்த்தலத்திற் சமிசிழவிற்
பதியு மன்றே. 1

நீண்டவனந் தணனேன மன்னவுருக் கொடு மாறி நேடிக் காணார்,
சேண்டலமா கியசென்னி திருவடிகள் வநம்பதும மென்று தேரிற், காண்
டகுமுட் செயல்கருதார் கழநிவளம் மிகுகழநிப் பதிவாழ் பொய்யா,
வாண்டவர்க்குத் திருவுருவோ டருள்வணெல்லைத் தாயடியார்க் கெளிமை
நன்றே. 2

கோயிலூ ரெனும் பெயருங் குலவருணர் நால்வர்களிற் குடிகள் தம்
பால், ஆயிரா காதிபந்தத் தொடககுண்டு சரணடைந்த வவர்க்கி ரங்கித்,
தாயிலான் மாவிதுவ ஞன்மாவி தெனத்தெரிக்குந் தத்து வார்த்த, மாயி
ஞேன் றனைநெல்லைத் தாயருட்காண் டவனென்ப ரறிந்தோ ரம்மா. 3

அகத்திருள் கடிந்த முத்திரா மலிங்க வாண்டவன் யானென தென்னச்
செகத்தினை மயக்குஞ் செருக்கிலாத் துறவுச் சாமியே சிவதரு மங்கள்
மிகப்புரிந் தடைந்தோ ரகவிருள் வெருட்டு மித்திர ஞஞ்சிதம் பரதே
சிகனிறை கல்வி வீரப்ப சாமி செப்பிவர் தகைமிக வரிதால். 4

ஆற்றுயர் நதியைக் கீற்றுவாண் மதியை யணிசடைக் கொற்றவா ளீசா
பாற்றுதை நெல்லை நாயகி தாட்கட் பற்றிலாப் பற்றினுற் புரிந்த
மாற்றுரை பொன்னின் மணியினிற் குயிற்றி வனைந்தபொற் கோயிலின்
பணிச்சீர், சாற்றுறிற் கோயி லூரெனும் பெயரே சான்றதாக் கூறிடுந்
தகைத்தால். 5

கண்ணகற் பணையின் விரிநியங் கதிர்க்குட் கரிமறை தருவளங் காட்டுந்
தண்ணநீ ரெல்லா மமுதினி லினிக்குந் தருமலா துளித்துவார்ந் தோடி
விண்ணதி யிழிந்து பெருகுதல் கடுப்ப வியன்றிருக் கோயிலார்த் தலத்தி
வண்ணல்கொண் மதுபுட் கரணியப் பெயரா லாறுமார் கழநியம் பதியே.

பானநா னமொடு பரிசிப் பப்பார் பவித்திர மாகிப்பூர் வீகம்
ஆனசால் பமைந்த புண்ணிய மலிந்தே யரவிந்தம் பானவிற் றுளிக்குந்
தேனணி பெருகு மதுப்பெயர் வாவித் தீர்த்தத்தைத் திருமுனர்ப் பதித்து
மாணணி யங்கைக் கொற்றவா ளீசர் வல்லியோ டருள்புரிந் திலங்கும். 7

பண்ணு மறையாம் பூங்கொடிகள் பாண்டிவளநா டெனுந் தருவிற்
றண்ணார்ந் தடர்ந்து படர்ந்து பயன் றருத றெரிந்த வேதியர்கள்
நண்ணு நிற்பத் தருமமொடு தானந் தியாக நவநவமா
யெண்ணு லளிக்கு மியல்புடையோ ரெண்ணும் வள்ளற் குணவாளன். 8

தன்னிற் றோன்றும் பிரபஞ்ச சாலங் கான னீரெனவே
யுன்னிச் சிவமா யுண்முகத்தி லுபாசித் திருக்கு மூண்மையின்கண்
மன்னி மனுவின் குலத்தரச னென்னக் காணும் வகையியற்றிக்
கன்னித் திருநாட் டணியாக்குங் கோயிலூ ரிற் கதிர்க்கின்றேன். 9

அத்தவத் தாடிப் பூரத் திருவிழா வாற்ற வங்கண்
எத்தகைச் சார்பி னேரு மிருபிறப் பாள ராதி
நித்தமுங் களங்க ளோங்கி நிகழ்ந்திட வலங்கா ரங்கொள்
சத்தர்வாழ் தெருவி னெல்லைத் தாய்தரி சனஞ்செய் வாரால். 10

விண்ணாட்டி விருந்தாடிப் பூரவிழாத் தொறும்வரல்போல் வியப்பத்
தோற்றுந், தண்ணாருங் கற்பகமுங் காமதே னுவுஞ்சிங்கந் தகைசால் சான்
றோர், எண்ணாருங் கயிலாய மனமிடப மிபங்குதிரை யிரதஞ் சேடன்,
கண்ணாகும் பூஞ்சிவிகை முதலூர்தி யுலாய்நெல்லைக் கௌரி மன்னும். 11

தமனியப்பன் மணிகுயின்ற கேடகத்திற் றவவடிவாந் தரிச னத்தைச்
சமதமஞா னியராதி யாவர்கட்கு முண்முகத்துந் தந்து நான்கா
யமர்பதவி களுமருளி யாலயத்துட் புகுந்தபய வரதந் தாங்கித்
தமரவலைக் கடல்புடைசூழ் சகம்புரந்தாங் கிருந்தனளாற் றயையின்மாதோ.

வடகலைதென் கலையுணர்ந்து வரும்பிரயோ சனங்கருணைக்
கடலைவழி படுதலெனக் கருத்துணர்ந்து வழிபடுவோன்
விடலரிதென் பனமறந்தே விசுவசிப்போ னெவரிடத்தும்
மடமுதல்மூன் றகலண்ணா மலைஞான தேசிகனே. 13

பிரமவித்தி யாப்பிரசா ரணசபையி னிற்றொடங்கித்
திரமதாமைந் தாம்வருடத் திற்றிரா விடங்கிரந்த
நரலைநிந் தியவிற்ப னர்மகிழ்ந்து வீற்றிருந்து
பிரசிங்கப் பதற்கக்கி ராசனத் துறும்பிரியன். 14

ஐந்தெழுத் தருமை யவிர்குரு லிங்க சங்கமத் தெளிவுஞ்சென் மத்துள்
ளந்திலாப் புருட னுயர்ந்ததென் பொருளு நவிலுவ னடையய னிகழ்வும்
அந்திலாஞ் சைவ வைதிக மிதுவென் பதுமதான் றத்தியா ரோபந்
தந்தலக் கணத்தின் விளக்கமுங் குகன்றன் சரிதமுந் தெய்வமச் சரணும்.

இவைமுதற் பிரசங் கம்பல விசேட மிசைந்தவந் தணர்துற வோர்கட்
கவைத்தலத் துள்ள யாவரும் வியப்ப வாடைபொன் முதற்கொள்சன் மா
னம், நவையக லகம்மெய் புளகுறத் தெவிட்ட நல்கின னல்வரு டந்தோ
றுவைதவி ராம னெல்லைநா யகியா ளுயரருள் பெற்றுவா ழியவே. 16

கோயிலூர் வாழ்கவதிற் குடிகொள்கொற்ற வாளீசர் குன்றாச் செல்வத்
தாயிருந்த திருநெல்லைத் தாய்வாழ்க வேதாந்த சாத்தி ரங்கள்
பாயிருந்த மடம்வாழ்க வதிற்பொலிந்த துறவுமுதற் பலவாந் தன்மை
மேயதவத் தினர்வாழ்க வீறுதிரு விழாவாழ்க வேதம் வாழ்க. 17

## விவேகசட்கம்.

அனித்தியபூதத் தேகநானன்று விந்தியத்தாங்கநா னன்று
நனித்தவாங்கார பிராணவர்க்கங்க ளன்றுநற் புந்தியுமன்று
தொனித்திடுந்தார மனைசெல்வங்களுக்குத் தூரமாஞ்சாட்சிநா னென்றுந்
தனித்துநித்தியமாய்ப் பிரத்தியகான்மாவாந் தற்பதப்பொருளதாஞ்
[சிவோகம்.

உற்பவன்விருத்த னன்றுநானோர்கா லத்தினுநசிப்பவ னன்று
வற்பமாந்தேக காரியமான வவையெலா மகங்காரத்தல்லாற்
றற்பதவடிவாஞ் சின்மயமான வெனக்கிலை சகளநிஷ்களமா
யெப்புறத்தேனு மெல்லையற்றிருக்கு மின்பசிற்சொரூபமாஞ் சிவோகம்.

சத்தியஞான னந்தமாம்பிரமத் துதித்திடு மாயையிற்சனித்த
மெத்துமிவ்வுலகஞ் சேதனத்திடையே நசிக்குமதேதென விளம்பிற்
றத்துசொப்பனமுஞ் சுழுத்தியிலசத்தாந் தன்மைபோற் சத்திலாதிருக்கு
சுத்தபூரணமாய் நித்தியமாகித் துலங்கியசொரூபமாஞ் சிவோகம். [ஞ்

பழுதைதன்னிடத்திற் பாம்புதோன்றுதல்போற் பரப்பிர மத்திடையத
கழிதருமஞ்ஞா னத்தினாற்சீவ னுதித்திடக் கண்டவனொருவன் [னிற்
பழுதையென்றதனாற் சர்ப்பமோகமும்போய்ப் பழுதையாய்க் கண்டதுபோ
வழுவிறேசிகனார் சீவனீயன்றெனன் றறைந்திடவாகினேன் சிவோகம். [ல

எமக்குமன்னியமா முலகமொன்றில்லை யெவ்வுல கங்களெம்மிடத்திற்
சமித்துவுற்பவமா மாதலான்மாயை வடிவம தேதெனிற்சாற்ற
வமைத்தகண்ணாடி விம்பமாநிழல்போ லடங்கியெம் மிடத்தினில்விளங்கும்
தமத்துவமில்லாச் சச்சிதானந்த தற்பதவிமலமாஞ் சிவோகம்.

சாக்கிரமதனி விந்திரியங்க டமக்குமேற்சாட்சியாஞ் சிவோகம்
தேக்குசொப்பனத்தி னுலகரூபமதாய்ச் செய்மனச்சாட்சியாஞ் சிவோகந்
தாக்கியசித்த நாசமாஞ்சுழுத்தி யவத்தையிற் சாட்சியாஞ் சிவோக
நீக்கமிறுரியா னந்தமாஞ்சர்வ நிர்மலசாட்சியாஞ் சிவோகம்.

கோவிலூர்த்
திரு நெல்லை யம்மன் மஹோத்சவ
வாஹநக் கவிகள்.

---

மாமேவு வானவர் பூமாரி பெய்து மகிழ்ந்திடவிப்
பூமேவு மெய்யடி யார்கண்டு போற்றிடப் பொங்கவியம்
நாமேவு கோவிலூர்ச் சாலிவா டீஸ்வரி நல்கமிக
வாமேவு கற்பக மீதிவந் தாள்கண்டு வாழ்த்துமினே.
நீடாழி வையத்து ளன்பரைப் பார்த்தரு ணேத்திரத்தாள்
தோடாரு மீசனுங் கண்டே புரிந்திடுந் தோத்திரத்தாள்
ஏடார் மலர்ப்பொழிற் கோவிலூர்ச் சாலிவா டீஸ்வரித்தாய்
கோடாருந் தேனுவின் மீதுவந் தாடுதி கூறுமினே.
சொல்லா ரிளங்கதி ராயிரம் போலொளிர் சோதியினாள்
நில்லா தருந்தவஞ் செய்முனி வோர்க்கரு ணீதியினாள்
நல்லா ரணம்புக ழுங்கோவி லூர்நெல்லை நாயகித்தாய்
வில்லாருஞ் சிம்மயா னத்துவந் தாள்வரம் வேண்டுமினே.
பண்பார் திலத மணிந்திடும் பான்மதிப் பாலத்தினாள்
திண்பார் புகழுமெய்த் தொண்டரைக் காத்தருள் சீலத்தினாள்
நண்பாய மார்கள்சூழ் கோவிலூர் நெல்லை நாயகித்தாய்
கண்பார் கயிலை மலையானைத் துற்றனள் கண்டுய்மினே.
அருமா னிலம்விளங் கோங்கிடப் பொங்குதே னாறுடையாள்
வெருவாரை வென்று செயத்தம்ப நாட்டிடும் வீறுடையாள்
ஒருவாதி யாழைமீட் டும்நெல்லை நாயகி யோகையுடன்
திருவாரும் பாலன மீதிவந் தாடுதி செய்யுமினே.
பேசா தருந்தவஞ் செய்முனி வோரும் பெறலரியாள்
வாசாம கோசர மாநெல்லை நாயகி வல்லிநிதம்
மாசாசை யற்றமெய்த் தொண்டரைக் காத்திடும் வாஞ்சையினாற்
றேசாரு மால்விடை மீதுவந் தாடுதி செய்யுமினே.
வாடாத தாமரைக் கையா லருளும் மயிலனையாள்
கோடாத நான்மறை யின்பொரு ளோதுங் குயிலனையாள்
ஈடாரு மாதவர் போற்றிடுஞ் சாலிவா டீஸ்வரித்தாய்
கோடாரும் வாலிப மீதுவந் தாடுதி கூறுமினே.
ஏர்மேவு ஞானசம் பந்தரா லுற்றிடு மேடகத்தாள்
நீர்மேவு மம்புவி யைக்காக்கு மெய்யரு ணீடகத்தாள்
நார்மேவு மாதவர் சூழ்கோவி லூர்நெல்லை நாயகித்தாய்
தார்மேவு வாம்பரி மீதுவந் தாடுதி சாற்றுமினே.
கண்ணா யிரத்தனுங் காணாரு மாமணிக் கண்டிகையாள்
தண்ணாருஞ் சாம்பு னதத்தினாற் செய்திடுந் தண்டிகையாள்
எண்ணாரை வென்றிடுங் கோவிலூர்ச் சாலிவா டீஸ்வரித்தாய்
பண்ணாரு மாதிசே டன்மீது வந்தருள் பாலிக்குமே.

வேம்பத்தூர் - சௌந்தர பாரதி.